Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 258 உள்ளூர் - 15.09.2026 செவ்வாய்க்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 258 வெளியூர் - 16.09.2026 புதன்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**புரட்டாசி மாத பலன்கள்!**

**மதுரை ஊரக வளர்ச்சித் துறை காலியிடங்கள்!**

**ராஜஸ்தானில் 'தாமரை' அலை!**

**நீட் தேர்வில் அதிரடி மாற்றம்!**

## வர்த்தக ஒப்பந்தம்: இந்தியா - கனடா நான்காம் கட்டப் பேச்சு தொடக்கம்!



புது தில்லி, செப். 15–

இந்தியா – கனடா இடையே மேற்கொள்ளப்பட உள்ள விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை (சிஇபிஏ) இறுதி செய்வதற்கான நான்காம் கட்ட பேச்சுவார்த்தை புது தில்லியில் திங்கள்கிழமை தொடங்க ப்பட்டது.

வரும் 18–ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் பேச்சுவார்த்தையில் சரக்குகள், சேவைகள், விதிகள், தொழில்நுட்ப வர்த்தக தடைகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

## மோடியின் 'BRICS' ராஜதந்திர வெற்றி! ஒருமித்த டெல்லி பிரகடனம்!



புதுதில்லி, செப். 15–

உலகப் போர் பதற்றம், வர்த்தக மோதல்கள், பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் நடைபெற்ற 18–வது பிரிக்ஸ் உச்சி மாநாடு, இந்தியாவின் ராஜதந்திர செல்வாக்கை வெளிப்படுத்தியதாக மதிப்பிடப்படுகிறது.

140–க்கும் மேற்பட்ட சர்வதேச விவகாரங்களை உள்ளடக்கிய 'புதுடெல்லி பிரகடனம்' ஒருமனதாக ஏற்கப்பட்டது மாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது. ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட கருத்து வேறுபாடுகள் கொண்ட நாடுகளையும் ஒரே தளத்தில் இணைத்து கருத்தொற்றுமை உருவாக்க இந்தியா முயன்றது.

பிரிக்ஸ் வர்த்தகத்தில் புதிய பொதுக் கரன்சியை அறிமுகப்படுத்தாமல், உறுப்பு நாடுகளின் சொந்த நாணயங்களில் பரிவர்த்தனையை அதிகரிக்க கவனம் செலுத்தப்பட்டது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், IMF, உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கவும் இந்தியா வலியுறுத்தியது.

எல்லை தாண்டிய பயங்கரவாதம், தீவிரவாதிகளுக்கு நிதியுதவி மற்றும் அடைக்கலம் அளிப்பதற்கு எதிரான நிலைப்பாடும் பிரகடனத்தில் இடம்பெற்றது.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லி வந்த சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் மோடி நடத்திய பேச்சுவார்த்தை, இந்தியா சீனா உறவிலும் முக்கிய கவனம் பெற்றது. மாநாட்டின்போது ரஷியா, சீனா, ஈரான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடன் 15 இருதரப்பு சந்திப்புகளையும் மோடி நடத்தியதாக செய்தி தெரிவிக்கிறது.

பிரிக்ஸை மேற்கத்திய எதிர்ப்பு அணியாக மாற்றாமல், 'Global South'–க்கான தீர்வு நோக்கிய சர்வதேச தளமாக முன்னிறுத்தியது இந்தியாவின் முக்கிய ராஜதந்திர வெற்றியாக பார்க்கப்படுகிறது.

## ராஜஸ்தானில் 'தாமரை' அலை!




ஜெய்ப்பூர், செப். 15–

ராஜஸ்தானில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற 309 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பாஜக குறிப்பிடத்தக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது. மொத்தம் 10,244 வார்டுகளில் திங்கள்கிழமை மாலை நிலவரப்படி பாஜக 4,179 வார்டுகளையும், காங்கிரஸ் 3,613 வார்டுகளையும் கைப்பற்றியுள்ளது.

கடந்த தேர்தலில் 2,666 வார்டுகளில் வென்றிருந்த பாஜக, இம்முறை தனது வெற்றி எண்ணிக்கையை 56.8 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்த வார்டுகளில் அதன் பங்கு 35.7 சதவீதத்திலிருந்து 40.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த தேர்தலில் முதலிடத்தில் இருந்த காங்கிரஸ், இம்முறை 35.3 சதவீத வார்டுகளை மட்டுமே பெற்றதால் பின்னடைவைச் சந்தித்துள்ளது. சுயேச்சைகள் 2,273 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளனர். ராஷ்ட்ரீய லோக்தாந்த்ரிக் கட்சி 63 வார்டுகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 38 வார்டுகளையும், பகுஜன் சமாஜ் கட்சி 19 வார்டுகளையும் கைப்பற்றியுள்ளன.

## பணவீக்கம் திடீர் பாய்ச்சல்!

# விலைவாசி மீண்டும் 'ஷாக்'! கச்சா எண்ணெயும் கொடுக்கும் அடி!

## ஆர்பிஐ கையில் எடுக்கப்போகும் சாட்டை!!



புதுதில்லி, செப். 15–

இந்தியாவில் சில்லறை பணவீக்கம் மீண்டும் வேகமாக உயர்ந்துள்ளது. ஜூலை மாதத்தில் 4.45 சதவீதமாக இருந்த சில்லறை பணவீக்கம், ஆகஸ்டில் 4.82 சதவீதமாக அதிகரித்துள்ளது. சந்தை கணிப்புகளைவிட பணவீக்கம் அதிகமாக பதிவாகியிருப்பது பொருளாதார வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

வெங்காயம், சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு பணவீக்க அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தால் உணவுப் பணவீக்கம் 5.52 சதவீதத்திலிருந்து 5.95 சதவீதமாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருப்பதும் இந்தியாவுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் பேரல் 109 டாலர், WTI கச்சா எண்ணெய் 104 டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளதாக செய்தியில் கூறப்பட்டுள்ளது. இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 85 சதவீதத்தை இறக்குமதி செய்வதால், எண்ணெய் விலை உயர்வு போக்குவரத்து செலவு மட்டுமின்றி பல்வேறு பொருட்களின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

ஆடைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், கல்வி உள்ளிட்ட துறைகளிலும் பணவீக்கம் 4 சதவீதத்தைத் தாண்டியுள்ளது. ரியல் எஸ்டேட், தண்ணீர், மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பான பணவீக்கம் 2.16 சதவீதத்திலிருந்து 2.61 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில் தற்போது 5.25 சதவீதமாக உள்ள ரெப்போ வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி அடுத்த நாணயக் கொள்கைக் கூட்டத்தில் உயர்த்துமா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. பணவீக்கம் தொடர்ந்து உயர்ந்தால், விலைவாசியைக் கட்டுப்படுத்த RBI கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுமா? என்பதே தற்போது முக்கிய கேள்வியாகியுள்ளது.

## நீட் தேர்வில் அதிரடி மாற்றம்!



புதுதில்லி, செப். 15–

மருத்துவப் படிப்புகளுக்கான நீட்–யுஜி நுழைவுத் தேர்வை கணினி வழித் தேர்வாக (CBT) மாற்ற தேசிய தேர்வு முகமை தீவிரமாக பரிசீலித்து வருகிறது. எதிர்காலத்தில் NTA நடத்தும் அனைத்து முக்கியத் தேர்வுகளை யும் கணினி வழியில் நடத்துவதே இலக்கு என அதன் தலைவர் அபிஷேக் சிங் தெரிவித்துள்ளார்.

தற்போது JEE, UGC–NET, CUET, NIFT உள்ளிட்ட முக்கியத் தேர்வுகள் கணினி வழியில் நடைபெறும் நிலையில், NEET–UG மட்டும் இன்னும் அந்த முறைக்கு முழுமையாக மாறவில்லை. நந்தன் நீலகேனி தலைமையிலான உயர்மட்டக் குழு, நீட் தேர்வை கணினி வழிக்கு மாற்றுவதற்குத் தேவையான தேர்வு மையங்கள், தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பு களை ஆய்வு செய்து வருவதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகளைக் கண்டறிய AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும் NTA ஆய்வு செய்து வருகிறது. தேர்வுத் தரவுகள் மற்றும் விடையளிக்கும் முறைகளை AI மூலம் பகுப்பாய்வு செய்து சந்தேகத்துக்குரிய செயல்பாடுகளை முன்கூட்டியே கண்டறிவது இதன் நோக்க மாகும். நாடு முழுவதும் போதுமான கணினி வசதியுள்ள தேர்வு மையங்களை ஏற்படுத்தி, பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே இந்தப் பெரிய மாற்றம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் முன்னிலையில், இங்கிலாந்து, இலண்டன் நகரில், சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் லிமிடெட் (Samvardhana Motherson International Ltd.,) நிறுவனம், அதன் ஐரோப்பா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து, வழிகாட்டி நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் சுமார் ரூ.11,000 கோடி முதலீடு மற்றும் 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் குழுமத்தின் உலகளாவிய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புத் துறைத் தலைவர் பாரி பெயிண்டர் மற்றும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தீபக் ஜேக்கப், ஆகியோர் கையெழுத்திட்டு, ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் குமரன் பெரியசாமி, IFS மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




இங்கிலாந்து, லண்டனில், அசோக் லேலண்ட் (Ashok Leyland நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் தீரஜ் ஹிந்துஜா, ஃபினோலெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (Finolex Industries Limited) நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் பிரகாஷ் பி. சாப்ரியா, இயக்குநர் ரீட்டா ஹிந்துஜா சாப்ரியா ஆகியோர் சந்தித்து, 'வெற்றி' தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழுமம் மேற்கொண்டுள்ள முதலீடுகளின் முன்னேற்றம், காற்றாலை மின்சக்தித் துறையில் முதலீடுகளை மேலும் அதிகரிப்பது போன்றவை தொடர்பாக கலந்துரையாடினர். தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை. இந்நிகழ்வின்போது, இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் குமரன் பெரியசாமி, IFS, நிதி மணி திரிபாதி, Minister (Economic) High Commission of India, London மற்றும் தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் முன்னிலையில், இங்கிலாந்து, இலண்டன் நகரில் தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களை (GCCs) விரிவுபடுத்துவதற்கும் நிறுவுவதற்காக, எர்ன்ஸ்ட் & யங் (Ernst & Young) நிறுவனத்துடன் சுமார் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000–க்கும் மேற்பட்ட உயர் மதிப்புடைய புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும், ஸ்வீடனைச் சேர்ந்த சிக்மா டெக்னாலஜி குரூப், தமிழ்நாட்டில் எம்பெடட் சிஸ்டம்ஸ், மின்மயமாக்கல் மற்றும் தொழில்துறை டிஜிட்டல்மயமாக்கல் ஆகிய துறைகளில் 600 உயர் மதிப்பு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், எர்ன்ஸ்ட் & யங் நிறுவனத்தின் உலகளாவிய வாடிக்கையாளர் நிர்வகிக்கப்படும் சேவைகள் (Global Customer Managed Services) பிரிவின் தலைவர் மைக்கேல் வான் டெர் கீஸ்ட் (Michael Von Der Geest மற்றும் சிக்மா டெக்னாலஜி குரூப் (Sigma Technology Group) நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மைக்கேல் கார்ல்சன் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி கிருஷ்ணா ராதாகிருஷ்ணன் ஆகியோரும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டு, ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## தலையங்கம்

மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 15.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 29-ம் தேதி

# உ.பி. 2027: யோகியின் பலத்தை உடைக்குமா அகிலேஷின் 'பிடிஏ' வியூகம்?



"டெல்லி சிம்மாசனத்துக்கான பாதை லக்னோ வழியாகச் செல்கிறது" என்ற அரசியல் வாசகம் மீண்டும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. நாட்டிலேயே அதிக மக்களவைத் தொகுதிகளைக் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் நடைபெறவுள்ள 2027 சட்டப்பேரவைத் தேர்தல், மாநில ஆட்சியை மட்டும் தீர்மானிக்கும் தேர்தலாக இருக்காது; தேசிய அரசியலின் அடுத்த கட்டத்தையும் தீர்மானிக்கக்கூடிய களமாக அமையும்.

ஒருபுறம் பிரதமர் மோடியின் செல்வாக்கு, முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் வலுவான அரசியல் பிம்பம், பாஜகவின் அமைப்பு பலம். மறுபுறம் அகிலேஷ் யாதவின் 'பிடிஏ' — பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள், சிறுபான்மையினர் கூட்டணி வியூகம். இந்த இரு அணுகுமுறைகளின் நேரடி மோதலாகவே 2027 தேர்தல் உருவாகிறது.

2024 மக்களவைத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தின் 80 தொகுதிகளில் சமாஜ்வாதி 37, காங்கிரஸ் 6 என 'இண்டியா' கூட்டணி 43 இடங்களைப் பெற்றது. குறிப்பாக அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியில் சமாஜ்வாதி பெற்ற வெற்றி, பாஜகவுக்கு முக்கிய அரசியல் எச்சரிக்கையாக அமைந்தது.

இதன் தொடர்ச்சியாக யாதவ்முஸ்லிம் வாக்குகளை மட்டும் சார்ந்திருக்காமல், குர்மி, பாசி உள்ளிட்ட பல்வேறு சமூகங்களையும் இணைக்கும் முயற்சியை அகிலேஷ் தீவிரப்படுத்துகிறார். அதேநேரத்தில் டிம்பிள் யாதவை முன்னிறுத்தி பெண் வாக்காளர்களை அணுகுவது சமாஜ்வாதியின் மற்றொரு முக்கிய நகர்வாகத் தெரிகிறது.

ஆனால் பாஜகவை வீழ்த்துவது எளிதல்ல. பத்தாண்டு ஆட்சி, வலுவான பூத் கட்டமைப்பு, மோடியோகி செல்வாக்கு மற்றும் நலத்திட்டங்கள் பாஜகவின் பெரும் பலங்களாக உள்ளன. அதேபோல் கடந்த சமாஜ்வாதி ஆட்சியின் சட்டம் ஒழுங்கு குறித்த எதிர்மறை பிம்பத்தை மாற்ற வேண்டிய சவாலும் அகிலேஷுக்கு உள்ளது.


18 முதல் 29 வயதுடைய இளம் வாக்காளர்கள் 21.19 சதவீதம் இருப்பதாக கட்டுரையில் குறிப்பிடப்படுவது இன்னொரு முக்கிய அம்சம். பெண்களுடன் இளைஞர்களின் ஆதரவையும் எந்த அணி வெல்கிறதோ, அந்த அணிக்கே ஆட்சிக்கான பாதை எளிதாகலாம்.

எனவே 2027 தேர்தல் யோகி எதிர் அகிலேஷ் என்ற இரு தலைவர்களின் போட்டி மட்டுமல்ல. இந்துத்துவ அரசியல், சமூகக் கூட்டணி, பெண்கள் நலன், இளைஞர்களின் எதிர்பார்ப்பு, வேலைவாய்ப்பு, சட்டம்ஒழுங்கு ஆகியவற்றின் மீதான மக்களின் தீர்ப்பாகவும் அமையும்.

2024–ல் பாஜகவுக்கு எச்சரிக்கை மணி அடித்த உத்தரப் பிரதேசம், 2027–ல் யாருக்கு அதிகார மணி அடிக்கப் போகிறது? அதற்கான விடையை இந்தியாவே உற்றுநோக்குகிறது.

**ஆசிரியர்**
**மதுரை மணி நாளிதழ்**

# தமிழ்நாட்டின் சமூக, அரசியல் வரலாற்றில் தனி முத்திரை பதித்தவர் அண்ணா! முதல்வர் விஜய் புகழாரம்!



சென்னை, செப். 15–

ஏழை, எளிய மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா என்று முதல்வர் விஜய் புகழாரம் சூட்டியுள்ளார். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. அவரது பிறந்தநாளையொட்டி அரசியல் தலைவர்கள் பலரும் அண்ணாவை நினைவுகூர்ந்து பதிவிட்டு வருகின்றனர். முதல்வர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில், "தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கி, ஏழை எளிய மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில், அவரது தொலைநோக்குப் பார்வையையும், மக்கள் சேவையையும் நெஞ்சார நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.

எழுச்சியூட்டும் மேடைப் பேச்சாலும், கூர்மையான எழுத்தாற்றலாலும் மக்கள் மனங்களைக் கவர்ந்து, அவர்களின் பேராதரவோடு ஆட்சிப் பொறுப்பேற்று, தமிழ் மொழி மீது கொண்ட அளவற்ற பற்றால் நம் மாநிலத்திற்கு "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டி, மாநில சுயாட்சிக்கு வித்திட்டு, சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கி தமிழ்நாட்டின் சமூக, அரசியல் வரலாற்றில் தனி முத்திரை பதித்தவர் பேரறிஞர் அண்ணா. "கடமை கண்ணியம் – கட்டுப்பாடு", "ஏழையின் சிரிப்பில் இறை வனைக் காண்போம்" போன்ற அவரது உயரிய முழக்கங்களை நெஞ்சில் ஏந்தி, சமூகநீதியும், சமத்துவமும், சகோதரத்துவமும் எங்கும் தழைத்தோங்கிடவும், தமிழின் பெருமையைக் காத்திடவும் இந்நாளில் உறுதியேற்போம்!" என்று பதிவிட்டுள்ளார்.

# ரூ.2,000க்கு மேல் UPI கட்டணமா?



புதுதில்லி, செப். 15–

ரூ.2,000–க்கு மேல் UPI பரிவர்த்தனை செய்தால் பொது மக்களிடம் கட்டணம் வசூலிக்கப்படும் என்ற தகவல்களுக்கு மத்திய நிதியமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

அரசின் அறிவிப்பின்படி, ரூ.2,000 வரையிலான UPI பரிவர்த்தனைகள் மற்றும் RuPay டெபிட் கார்டு பரிவர்த்தனைகளுக்கு வங்கிகள் அல்லது சேவை வழங்குநர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்டணம் விதிக்கக் கூடாது.

குறிப்பாக, தனிநபர் இடையேயான UPI (P2P) பணப்பரிவர்த்தனைகள் தொடர்ந்து இலவசமாகவே இருக்கும். பெரும்பாலான வணிகப் பரிவர்த்தனைகளும் கட்டணமின்றி தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் ரூ.2,000–க்கு மேற்பட்ட சில குறிப்பிட்ட வணிகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டும் MDR கட்டணம் கொண்டுவரப்படலாம் என கூறப்பட்டாலும், அது இன்னும் அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வரவில்லை. அத்தகைய கட்டணம் வந்தாலும் சாதாரண UPI பயனர்களிடம் வசூலிக்கப்படாது; சம்பந்தப்பட்ட வணிகர்களுக்கே பொருந்தக்கூடும் என செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து சமத்துவ கட்சி சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா!



திருப்பூர், செப். 15–

இந்து சமத்துவ கட்சி சார்பில் திருப்பூரில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலை வைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மேலும் அனைத்து இடங்களிலும் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் விழாவும் நிறுவனத் தலைவர் உழைப்பாளி பூ பாலு தலைமையில் வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவில் மாநில பொதுச் செயலாளர்கள் செல்வம் மாநில செயலாளர் சிவா மேற்கு மாவட்ட தலைவர் பாலா வடக்கு மாவட்ட தலைவர் கார்த்தி மற்றும் விழா கமிட்டி பொறுப்பாளர்கள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.

# 118-வது அண்ணா பிறந்தநாள்!



ராசிபுரம், செப். 15–

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில், பேரறிஞர் அண்ணாவின் 118–வது பிறந்தநாள் விழா ராசிபுரம் நகரம் 23–வது வார்டு பகுதியில் நடைபெற்றது.

கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் விஸ்வநாத் ஆலோசனைப்படி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா. கார்த்திக் தலைமையில் நடைபெற்ற விழாவில், பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த ப்பட்டது.

தொடர்ந்து, அப்பகுதியைச் சேர்ந்த 300–க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட மருத்துவரணி துணைத்தலைவர் சிவப்பிரகாசம் முன்னிலை வகித்தார். நகர இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ்குமார், ராஜேஷ்குமார், பாண்டி, மாணவரணி துணை அமைப்பாளர் கிஷோர், படையப்பா, சஞ்சய், வார்டு இளைஞரணி அமைப்பாளர் வினோத்குமார், சிபிராஜ், பிரசாத், தனபால், தேவா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கிரிப்டோவில் ரகசிய ஷாப்பிங்! வெளிநாட்டு 'வவுச்சர்' ரூட்!



புதுதில்லி, செப். 15–

இந்தியாவில் சிலர் USDT உள்ளிட்ட கிரிப்டோகரன்சிகளை, ஸ்வீடன், ஜெர்மனி, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் செயல்படும் வெளிநாட்டு தளங்கள் மூலம் கிஃப்ட் கார்டு மற்றும் வவுச்சர்களாக மாற்றி ஷாப்பிங் செய்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வவுச்சர்கள் மூலம் மளிகைப் பொருட்கள், பெட்ரோல், மொபைல் ரீசார்ஜ், உணவு டெலிவரி, தங்க நகைகள் உள்ளிட்டவற்றை வாங்க முடிவதாக கூறப்படுகிறது. கிரிப்டோவை இந்திய வங்கிக் கணக்கிற்கு கொண்டு வராமல் நேரடியாக வெளிநாட்டு தளங்களுக்கு அனுப்புவதால், வழக்கமான வங்கி, வருமான வரித்துறை மற்றும் RBI கண்காணிப்பிலிருந்து பரிவர்த்தனைகள் தப்பக்கூடும் என்ற கவலை எழுந்துள்ளது.

இந்த நடைமுறை குறித்து மத்திய நிதி மற்றும் உள்துறை அமைச்சகங்களின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஈரான் போர்... திருப்பூருக்கு 'ஷாக்'!



சென்னை, செப். 15–

ஈரான் போர் மற்றும் வளைகுடா பதற்றத்தால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவது இந்திய ஜவுளித் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கச்சா எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் பாலியஸ்டர் மற்றும் பெட்ரோ கெமிக்கல் சாயங்களின் விலை அதிகரிப்பதால் ஆடை உற்பத்திச் செலவு உயர்ந்து வருகிறது.

இதற்கிடையே பருவநிலை காரணமாக பருத்தி உற்பத்தி குறைந்து அதன் விலையும் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதனால் திருப்பூர், சேலம், கோவை, திருச்சி உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய ஜவுளி மையங்களில் உற்பத்தியாளர்கள் விலையை உயர்த்துவதா அல்லது லாபத்தைக் குறைப்பதா என்ற நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடும். தீபாவளி ஷாப்பிங் சூடுபிடிக்கும் நிலையில் உற்பத்திச் செலவு தொடர்ந்து அதிகரித்தால் ஆடைகளின் விலை உயர வாய்ப்புள்ளதாக சந்தை வட்டாரங்கள் கணிக்கின்றன. இதன் தாக்கம் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் உள்ளிட்ட அடுத்தடுத்த பண்டிகைக் காலங்களிலும் நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குப்பைகளை தரம் பிரித்து வழங்கும் ரம்யா கஃபே முன்மாதிரியாக செயல்படும் டீ கடை!



நாகர்கோவில், செப். 15–

குப்பைகளை தரம் பிரித்து வழங்கும் ரம்யா கஃபே முன்மாதிரியாக செயல்படும் டீ கடை நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்து மாநகராட்சி நிர்வாகம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இராமன்புதூர் கார்மல் மவுண்ட் ரோடு சந்திப்பு பகுதியில் செயல்பட்டு வரும் ரம்யா கஃபே டீக்கடையில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக சேகரிப்பதற்காக நீலம் மற்றும் சிவப்பு நிற குப்பைத்தொட்டிகள் அமைக்கப்பட்டு, குப்பைகள் முறையாக தரம் பிரித்து வழங்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சி நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி முன்மாதிரியாக செயல்பட்டு வரும் ரம்யா கஃபே கடை உரிமையாளரை பாராட்டும் விதமாக, சுகாதார அலுவலர் திரு. ராஜா தலைமையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், மரக்கன்றுகளும் பரிசாக வழங்கப்பட்டன. "குப்பைகளை தரம் பிரித்து வழங்குவோம் தூய்மையான நாகர்கோவிலை உருவாக்குவோம்!"

# கரூரில் இடிந்து விழ காத்திருக்கும் குடிநீர் தொட்டி!




கரூர், செப். 15–

கரூர் மாநகராட்சி 15–வது வார்டு, வடக்கு காந்திகிராமம் முல்லை நகரில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, விரிசல்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். தொட்டியின் ஏணிப்படி மற்றும் கீழ்ப்பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. அருகிலேயே நியாயவிலைக் கடைசெயல்படுவதால் பொதுமக்கள் அச்சத்துடன் வந்து செல்வதாக கூறப்படுகிறது.

பழைய தொட்டிக்கு மாற்றாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.12 கோடி ஒதுக்கப்பட்டதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 4–ல் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும், தற்போது அடிப்பகுதிக்காக சுமார் 20 அடி பள்ளம் தோண்டப்பட்டதைத் தவிர முக்கிய கட்டுமானப் பணிகள் தொடங்கவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அசம்பாவிதம் ஏற்படும் முன் பழைய தொட்டியை அகற்றி, புதிய தொட்டியின் கட்டுமானத்தை போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்துக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# புரட்டாசி மாத பலன்கள்!



2026 புரட்டாசி காலத்தில் சூரியன் கன்னி ராசியில் சஞ்சரிக்கிறது; செப்டம்பர் 1718 தொடக்கமாகக் காலண்டர் மரபுகளின்படி சிறிய வேறுபாடு காணப்படுகிறது. Astrogya கீழே கொடுக்கப்படுவது பொதுவான மாத ராசிபலன் மட்டுமே; தனிப்பட்ட ஜாதகத்தைப் பொறுத்து பலன்கள் மாறலாம்.

**மேஷம்:** வேலை மற்றும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். கடன் பிரச்சினைகளைச் சமாளிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகள் தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம். புதிய முயற்சிகளில் நிதானம் அவசியம். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

**மிதுனம்:** வீடு, வாகனம் தொடர்பான விஷயங்களில் கவனம் தேவை. பணிச்சுமை அதிகரிக்கலாம். குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மை தரும்.

**கடகம்:** தன்னம்பிக்கையும் துணிச்சலும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக அமையும். சகோதரர்கள் வழியில் ஆதரவு கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கலாம். குடும்பத்தில் பேசும்போது பொறுமை அவசியம். சேமிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி:** புதிய பொறுப்புகள் தேடி வரும். வேலை, வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடலாம். அவசர முடிவுகளைத் தவிர்த்து உடல்நலத்திலும் கவனம் செலுத்துங்கள்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பயணம் மற்றும் முதலீட்டில் எச்சரிக்கை தேவை. ஆன்மிக ஈடுபாடு மனஅமைதியைத் தரும்.

**விருச்சிகம்:** வருமான வாய்ப்புகள் அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் மூத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்டகால முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம்.


**தனுசு:** தொழில் மற்றும் பணியில் பொறுப்புகள் அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உழைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரலாம். தடைப்பட்ட காரியங்கள் நகரத் தொடங்கும். ஆன்மிகப் பயணம் மற்றும் பெரியவர்களின் ஆதரவு சாதகமாக அமையும்.

**கும்பம்:** பணம் மற்றும் உடல்நல விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. ஆவணங்கள், முதலீடுகள், கடன் விவகாரங்களில் அவசரம் வேண்டாம்.

**மீனம்:** திருமணம், குடும்பம் மற்றும் கூட்டுத் தொழில் தொடர்பான விஷயங்களில் பொறுமை முக்கியம். கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

**புரட்டாசி சிறப்பு:** பெருமாள் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் மாதமாக புரட்டாசி கருதப்படுகிறது; குறிப்பாக புரட்டாசி சனிக்கிழமைகளில் விஷ்ணு/வெங்கடேசப் பெருமாள் வழிபாடு பரவலாக நடைபெறுகிறது.



## சினிமா துளிகள்..!

# 'திருப்பாச்சி'யுடன் மோதும் 'சிக்மா'




முதல்வர் விஜய்த்ரிஷா நடிப்பில் 2005–ல் வெளியாகி வெற்றி பெற்ற 'திருப்பாச்சி', 21 ஆண்டுகளுக்குப் பிறகு அக்டோபர் 1–ம் தேதி மீண்டும் திரையரங்குகளில் வெளியாகிறது.

அதற்கு அடுத்த நாளான அக்டோபர் 2–ம் தேதி, விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகும் 'சிக்மா' வெளியாகிறது. லைகா தயாரித்துள்ள இப்படத்தில் சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இதனால் அக்டோபர் தொடக்கத்தில் தந்தையின் 'திருப்பாச்சி' ரீ–ரிலீஸும், மகனின் முதல் இயக்கமான 'சிக்மா'வும் அடுத்தடுத்த நாட்களில் திரைக்கு வருவது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# குடல் ஆரோக்கியம் காக்க வேண்டுமா?



அடிக்கடி வயிறு உப்புசம், வாயுத்தொல்லை, செரிமானக் கோளாறு ஏற்படுபவர்கள் காலை உணவில் தயிர் மற்றும் ஓட்ஸ் சேர்த்துக்கொள்ளலாம். தயிரில் உள்ள புரோப யாடிக்குகள் குடலில் உள்ள நன்மை செய்யும் பாக்டீரியா க்களின் சமநிலைக்கு உதவுகின்றன. ஓட்ஸில் அதிக அளவு நார்ச்சத்து இருப்பதால் குடல் இயக்கம் சீராக நடைபெற உதவும். ஓட்ஸுடன் தயிர், வாழைப்பழம் அல்லது ஆப்பிள் சேர்த்தும் சாப்பிடலாம். சர்க்கரை அதிகம் சேர்க்கப்பட்ட யோகர்ட்டுக்கு பதிலாக சாதாரண தயிரைத் தேர்வு செய்வது நல்லது. நார்ச்சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ளும்போது போதுமான தண்ணீர் குடிப்பதும் அவசியம். காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள், பருப்பு வகைகளையும் உணவில் சேர்த்துக்கொள்வதுடன் பதப்படுத்தப்பட்ட உணவுகளைக் குறைப்பது குடல் ஆரோக்கி யத்திற்கு உதவும். தொடர்ந்து வயிற்றுவலி, கடுமையான உப்புசம், மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு இருந்தால் மருத்துவரை அணுகுவது அவசியம்.

## மீனாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மதுரைக்கு 50 சிறப்பு பஸ்கள்!



சென்னை, செப். 15–

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் 17–ந்தேதி கும்பாபிஷேகம் நடக்கிறது. இதையொட்டி பக்தர்களின் வசதிக்காக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

அதன்படி, நாளை (புதன்கிழமை) சென்னை கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து மதுரைக்கு 50 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சிறப்பு பஸ்கள் மதுரைக்கு இயக்கப்படுகிறது. அதன்படி, கோவையில் இருந்து 30, திருப்பூர் 30, ராமநாதபுரம் 30. அருப்புக்கோட்டை25, சிவகாசி 30, ராஜபாளையம் 30, விருதுநகர் 10, தேனி 30, திண்டுக்கல் 20 பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

மேலும், மதுரை மாநகரப் பகுதியில், திருமங்கலம், மேலூர், திருப்புவனம், வாடிப்பட்டி, நத்தம், பூவந்தி மற்றும் உசிலம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து தலா 20 பஸ்கள் இயக்கப்பட இருக்கிறது. இந்த தகவல், போக்குவரத்து துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலைக்கு வந்துள்ள ஆனந்த் அம்பானி அறிவித்த 25 புதிய மின்சாரப் பேருந்துகள்!



திருப்பதி செப். 15–

திருமலைக்காக ஆனந்த் அம்பானி அறிவித்த 25 புதிய மின்சாரப் பேருந்துகள் பயன்பாட்டிற்காக திருமலைக்கு வந்துள்ளன. கடந்த ஜூன் மாதம் திருமலைக்கு வருகை தந்திருந்த ஆனந்த் அம்பானி, ரிலையன்ஸ் அறக்கட்டளை சார்பாக திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு 25 புதிய மின்சாரப் பேருந்துகள் மற்றும் பிற வசதிகளை வழங்குவதாக அறிவித்திருந்தார். அதன்படி, திருமலையில் வருடாந்திர பிரம்மோற்சவத்தை முன்னிட்டு, ரிலையன்ஸ் அறக்கட்டளையின் ஆதரவில் அனந்த் அம்பானி ரூ.27.5 கோடி மதிப்பிலான 25 புதிய மின்சாரப் பேருந்துகள், 50 ஓட்டுநர்கள் மற்றும் ஒரு மின்னேற்ற நிலையம் ஆகியவற்றை திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு நன்கொடையாக வழங்க உள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, இந்த 25 பேருந்துகளும் ஞாயிற்றுக்கிழமை திருமலை வந்தடைந்தன. ஞாயிற்றுக்கிழமை ஒரு பேருந்து திருமலைக்கான சோதனை ஓட்டத்தை நிறைவு செய்தது; அதிகாரிகள் அதன் செயல்பாட்டை மதிப்பீடு செய்தனர். திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு போக்குவரத்து வசதியை அளிப்பதே இந்த பேருந்துகளின் நோக்கமாகும்.

வரும் மாதம் 16 ஆம் தேதி காலை ஸ்ரீவாரி பிரம்மோற்சவத்தின் போது ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு இவற்றை முறைப்படி தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றுடன், பாரத் பயோடிக் நிறுவனம் வழங்கும் மேலும் 7 மின்சாரப் பேருந்துகளும் திருமலையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துப் பேருந்துகளும் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, பக்தர்கள் பொதுப் போக்குவரத்து வசதியை எளிதாகப் பெற முடியும் என்பதோடு, தனியார் வாக னங்களைச் சார்ந்திருப்பதும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கும்பாபிஷேகம்: மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு 5 டன் மலர்கள் வருகை!





மதுரை, செப். 15–

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் வருகிற 17–ந்தேதி விமரிசையாக நடக்கிறது.

கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்க பூஜைகள் 11–ந்தேதி தொடங்கின. அதன்படி முதல் கால யாகசாலை பூஜைகள் கோவில் வடக்காடி வீதியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள யாகசாலையில் தொடங்கி நடந்து வருகி றது. அங்கு ஹோமம் வளர்க்கப்பட்டு 400 சிவாச்சாரியார்களால் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே கும்பாபிஷேக விழாவுக்காக கோவில் கோபுரங்கள், பிரகாரங்கள், மூலவர் சன்னதிகள், கொடிமரங்கள் முழுவதும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட உள்ளன. அதற்காக வெளிநாடு, வெளி மாநிலங்கள், உள்ளூரில் இருந்து தற்போது 5 டன் மலர்கள் கோவிலுக்கு வந்தன. அதில் சம்பங்கி, சிவப்பு, வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிற அரளிப்பூக்கள், இருவாச்சி பூக்கள், மஞ்சள், வெள்ளை, ஆரஞ்சு நிற சாமந்தி பூக்கள், பல வண்ணங்களில் உள்ள ஆந்தூரியம் என பல வண்ண மலர்கள் வந்துள்ளன.

இவை நீண்ட நாள், நீண்ட நேரம் வாடாமல் நறுமணம் வீசக் கூடியது என கூறப்படுகிறது. இந்த பூக்கள் தற்போது புதுமண்டபத்தில் இறக்கி வைத்து அதனை மாலையாகக் கட்டும் பணியில் 50 பேர் ஈடுபட்டு வருகிறார்கள். முதல் கட்டமாக 4 ராஜ கோபுரங்களுக்கு சுமார் 175 அடி உயரத்தில் மாலைகள் கட்டும் பணி தொடங்கி உள்ளதாகவும், இறுதி கட்டத்தில் மூலவர் மற்றும் கொடிமரம் பகுதியில் பூக்களால் அலங்காரம் செய்யும் வேலைகள் நடைபெறும் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு மீனாட்சி அம்மன் கோவிலில் கும்பாபிஷேக பணி கள் மும்முரமாக நடந்து வருகின்றன.

# மு.க.ஸ்டாலினுக்கு உடல்நலக்குறைவு!



சென்னை, செப். 15–

திமுக தொடங்கிய நாள் (செப்டம்பர் 17), தி.மு.க நிறுவனர் பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் (செப்டம்பர் 15) மற்றும் தந்தை பெரியார் பிறந்தநாளான (செப்டம்பர் 17) என மூன்று முக்கிய நிகழ்வுகளையும் ஒன்றாக நடத்தும் வகையில், ஆண்டுதோறும் முப்பெரும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த முப்பெரும் விழாவின் போது, தி.மு.க. சார்பில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது ஆகியவை வழங்கப்படும். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தி.மு.க. முப்பெரும் விழா 15–ந்தேதி (அதாவது இன்று) சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக இன்று நடைபெறவிருந்த திமுக முப்பெரும் விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். மேலும் இன்று மாலை நடக்க இருந்த நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது; முப்பெரும் விழாவுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று துரைமுருகன் தெரிவித்துள்ளார். சென்னையில் நடந்த அண்ணா பிறந்தநாள் விழாவிலும் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க. கொடி வண்ணத்தில் தயாராகும் பஸ்கள்!



சேலம், செப். 15–

சேலம் மண்டலத்தில், த.வெ.க., கட்சிக்கொடி வண்ணத்தில், 25 புதிய டவுன் பஸ்கள் இயக்கப்பட, தயாராக உள்ளன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில், அரசு பஸ்கள் பச்சை நிறத்துக்கு மாறின. அதன் பின், தி.மு.க., – அ.தி. மு.க., மாறி மாறி, ஆட்சிக்கு வந்த நிலையில், பஸ்களின் நிறம் மாறவில்லை.

கடந்த, 2026 சட்ட சபை தேர்தலில் த.வெ.க., வெற்றி பெற்றநிலையில், பஸ்களின் நிறத்தில் அக்கட்சி கை வைத்துள்ளது.

சேலம் பணிமனையில், 492 அரசு டவுன் பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதில், 15 ஆண்டுகளை கடந்த டவுன் பஸ்களுக்கு பதிலாக, புது பஸ்கள் இயக்கப்படுகின்றன. முதற்கட்டமாக, 25 பஸ்கள், த.வெ.க., கட்சியின் கொடி வண்ணமான, மஞ்சள், சிவப்பு பூசப்பட்டு, இயக்குவதற்கு தயாராக, ஜான்சன்பேட்டை பணிமனையில் நிறுத்தப்பட்டுள்ளன.

சேலம் அரசு போக்கு வரத்து அதிகாரிகள் கூறுகையில், 'தற்போது, 25 புதிய டவுன் பஸ்கள் வந்துள்ளன. மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இந்த பஸ்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். பஸ்களின் வண்ணம் குறித்து, எதுவும் தெரியாது' என்றனர்.

# முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு பாதுகாப்பு குறைப்பு!



சென்னை, செப். 15–

முன்னாள் முதல்–அமைச்சர் என்ற அடிப்படையில் ஓ.பன்னீர்செல்வத் துக்கு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு அளிக்கப்ப ட்டிருந்தது. இந்தநிலையில் ஓ.பன்னீர்செ ல்வத்துக்கு திடீரென பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு போலீஸ் துறை சார்பில் அவருடைய வீட்டுக்கு அளிக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு திரும்ப பெறப் பட்டுள்ளது. அவருடைய வீட்டில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் ஆயுதப்படை பிரிவுக்கு திரும்ப அழைக்கப்பட்டனர். அதுபோல், 'வி.ஐ.பி.' வாகன பாதுகாப்பும் திரும்பப் பெறப்பட்டுள்ளது. அவருக்கான பாதுகாப்பு 'ஒய்' பிரிவில் இருந்து 'எக்ஸ்' பிரிவாக குறைக்கப்பட்டுள்ளது. 'எக்ஸ்' பிரிவு என்பது அடிப்படை பாதுகாப்பு வழங்குவது ஆகும்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, "மத்திய பாதுகாப்பு அமைப்புகளால் 'அச்சுறுத்தல் மதிப்பீட்டு ஆய்வு' மேற்கொள்ளப்பட்டு, மத்திய உள்துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்க ப்பட்டு சிறப்பு பாதுகாப்பு வழங்கப்ப டுகிறது. மத்திய பாதுகாப்பு அமைப்பு களால் அச்சுறுத்தல் மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு வழங்கப்பட்ட 'ஒய்' பிரிவு பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது" என்றனர்.

# திமுக எம்பி ஆ.ராசா மீது 7 பிரிவுகளின்கீழ் வழக்கு!



சென்னை, செப். 15–

திமுக தலைவர் மு.க. ஸ்டாலினை அவமதிக்கும் வகையில் பேசியதாக தமிழக முதல்–அமைச்சர் ஜோசப் விஜய்யைக் கண்டித்து திமுக சார்பில் தமிழகம் முழுவதும் கடந்த 12–ந்தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை சைதாப்பேட்டை யில் நடைபெற்ற ஆர்ப்பா ட்டத்தில் திமுக எம்.பி. ஆ. ராசா, முதல்–அமைச்சர் விஜய்யை கடுமையாக விமர்சித்து பேசினார். ஆ.ராசாவின் பேச்சுக்கு தவெகவினர் கடும் கண்ட னம் தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில், முதல்–அமைச்சர் விஜய் குறித்து ஒருமையில் பேசிய ஆ.ராசா மீது சைதாப்பேட்டை காவல்நி லையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தவெக நிர்வாகி அளித்த புகாரின் அடிப்படையில் பொது இடத்தில் ஆபாசமாக பேசுதல், அமைதியை குலைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவமதிப்பு உள்ளிட்ட 7 பிரிவுகளின் கீழ் ஆ.ராசா மீது சைதாப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அமைச்சர் செங்கோட்டையன் வெற்றிக்கு எதிரான தேர்தல் வழக்கு நிராகரிப்பு!



சென்னை, செப். 15–

வருவாய்த் துறை அமைச்சர் செங்கோட்டையனுக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் கோபி செட்டிப்பாளையம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட செங்கோட்டையன் வெற்றி பெற்றார். வருவாய்த் துறை அமைச்சரான செங்கோட்டையனின் வெற்றிக்கு எதிராக அதிமுக வேட்பாளர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், செங்கோட்டையனின் வேட்புமனுவில் சான்றளித்துள்ள நோட்டரி வழக்குரைஞரின் உரிமம் காலாவதியாகிவிட்டதால், அந்த வேட்புமனுவை ஏற்றதே தவறு எனக் கூறியிருந்தார்.

அதேபோல், தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி அமைச்சர் செங்கோட்டையன் தரப்பிலும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், இந்த தேர்தல் வழக்கு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் இன்று(செப். 15) விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரிய மனு மீது அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் அதிமுக வேட்பாளர் பிரபு தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, அமைச்சர் செங்கோட்டையன் மனுவை தீர்ப்புக்காக ஒத்திவத்தார். இன்று, இந்த மனு மீது தீர்ப்பளித்த நீதிபதி, அமைச்சர் செங்கோட்டையனின் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டார்.

# வேலை வாய்ப்பு

## மதுரை ஊரக வளர்ச்சித் துறை காலியிடங்கள்!

மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள பதிவறை எழுத்தர் (Record Clerk), அலுவலக உதவியாளர் (Office Assistant) உள்ளிட்ட 4 பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

| விவரம் | தகவல் |
|---|---|
| துறை | மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| பணியின் பெயர் | பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் |
| மொத்த காலியிடங்கள் | 04 |
| வேலை வகை | தமிழ்நாடு அரசு வேலை |
| பணி நியமனம் | நிரந்தர அடிப்படையில் |
| பணியிடம் | மதுரை |
| விண்ணப்பம் தொடக்கம் | 11.09.2026 |
| கடைசி நாள் | 10.10.2026 |
| விண்ணப்பிக்கும் முறை | ஆஃப்லைன் |
| அதிகாரப்பூர்வ இணையதளம் | madurai.nic.in |

விண்ணப்பிக்கும் முறை: தகுதியுடையவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் விண்ணப்பத்தை ஆஃப்லைன் முறையில் கடைசி தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கல்வித் தகுதி, வயது வரம்பு, சம்பளம், இடஒதுக்கீடு மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

# வி.எஸ். பாபு உடல்நிலை சீராக உள்ளது! மருத்துவமனை அறிக்கை!



சென்னை, செப். 15–

கொளத்தூர் எம்எல்ஏ வி. எஸ். பாபுவின் உடல்நிலை சீராக உள்ளதாக மருத்துவ மனை அறிக்கை வெளியிட்டு ள்ளது. கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதி தவெக எம்எல்ஏ வி.எஸ். பாபுவுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளார். அவரின் உடல்நி லை குறித்து மருத்துவமனை தரப்பிலிருந்து அவ்வப்போது அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு பல்வேறு நிபுணர்கள் அடங்கிய குழு சிகிச்சை அளித்து வருவதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் இன்று காலை மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கை யில், "சுவாசக் கோளாறு காரணமாக செப்டம்பர் 9 அன்று சென்னையில் உள்ள எம்ஜிஎம் ஹெல்த்கேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் வி. எஸ். பாபுவின் உடல்நிலை, பல்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவரது மருத்துவ அளவீடுகள் தற்போது சீராக உள்ளன. அவரது முழு உடல்நிலையும் சீராக உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் விலை மேலும் குறைவு...!



சென்னை, செப். 15–

தங்கம் விலை மேலும் குறைந்துள்ளது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.680 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,12,320–க்கு விற்பனை செய்யப்படு கிறது. கிராமுக்கு ரூ.85 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,040–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் 4–வது நாளாக மாற்றமின்றி விற்பனையாகி வருகிறது. அதன்படி வெள்ளி ஒரு கிராம் ரூ.250–க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



எண்ணெய்ப் பலகாரம்
2331731
4377877
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வடமாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

## இன்றைய கார்ட்டூன்






அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா சாலையில் உள்ள அவரது சிலைக்கு அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர். அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்த், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே. பிரபு, சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ஆர். குமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# இந்திய எல்லையில் படைகளை குறைத்த சீனா: மத்திய அரசு தகவல்!

புதுடெல்லி, செப். 15–

கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த 2020–ம் ஆண்டு சீன ராணுவம் இந்திய பகுதிக்குள் அத்துமீற முயன்றதால் இந்திய ராணுவம் அவர்களை தடுத்து நிறுத்தியது. அப்போது ஏற்பட்ட மோதலில் இந்திய வீரர்கள் 24 பேர் உயிரிழந்தனர். சீனா தரப்பிலும் உயிர்ச்சேதம் நிகழ்ந்தது.



உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த மோதலை தொடர்ந்து இரு தரப்பினரும் அங்கு கூடுதல் படைகளை குவித்தன. இதனால் பல மாதங்களாக அங்கே பதற்றமும், பரபரப்பும் நீடித்தது. அத்துடன் இருநாட்டு உறவுகளும் சீர்குலைந்தது.

எனவே இந்த பதற்றத்தை தணித்து எல்லையில் அமைதியை நிரந்தரமாக்கும் நோக்கில் இரு தரப்பினரும் அடுத்தடுத்து பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இரு நாட்டு ராணுவ அதிகாரிகள் மட்டத்திலும், அடுத்தடுத்து சந்திப்புகள் நிகழ்ந்தன. அத்துடன் எல்லை மோதல்களை தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட சிறப்பு பிரதிநிதிகளும் அவ்வப்போது சந்தித்து பதற்றத்தை முடிவுக்கு கொண்டு வரவும், அங்கே படைகளை திரும்பப்பெறவும் வலியுறுத்தினர்.

இவ்வாறு நடந்த சந்திப்புகளால் இரு நாட்டுக்கு இடையேயான உறவுகள் மீண்டும் துளிர்த்தன. இதன் தொடர்ச்சியாக இரு நாட்டு மந்திரிகள் மட்டத்திலும் பின்னர் தலைவர்கள் மட்டத்திலும் பேச்சுவார்த்தை நடந்தது.

அந்தவகையில் பிரதமர் மோடி கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தியான்ஜின் நகரில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில், சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்து பேசினார். அதன் பின்னரும் இருதரப்பு ராணுவ மட்டத்திலான சந்திப்புகள் நடந்தன. இதில் கிழக்கு லடாக்கில் படைகளை திரும்பப் பெற சீனாவிடம் இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு அடுத்தடுத்து நடந்த சந்திப்புகளால் நடந்த இருதரப்பு உறவு முன்னேற்றத்தை தொடர்ந்து எல்லையில் இருந்து சீனா படைகளை கணிசமாக குறைத்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.

அந்தவகையில் சீனாவுடனான இந்தியாவின் வடக்கு (லடாக்) எல்லை கட்டுப்பாட்டுக்கோடு பகுதியில் இருந்து சீனா கணிசமான அளவுக்கு படைகளை கடந்த ஆண்டு குறைத்து இருப்பதாக ராணுவ அமைச்சகம் கூறியுள்ளது. தற்போது அந்த எல்லை கட்டுப்பாட்டுக்கோடு மற்றும் சீனாவின் பாரம்பரிய பயிற்சிப்பகுதிகளில் 10 ஒருங்கிணைந்த ஆயு தப்படைப்பிரிவு அளவிலான படைகள் மட்டுமே நிறுத்தப்பட்டு உள்ளதாக ராணுவ அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

அதேநேரம் இந்திய ராணுவத்தின் படைகள் அனைத்து நிலைகளிலும் எத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளை சமாளிக்கும் வகையில் வலுவாகவும், நன்கு சமநிலையுடனும் தயார் நிலையில் உள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# அண்ணாமலைப் பல்கலை. ஆசிரியர்கள், ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்!

சிதம்பரம், செப். 15–

பல்கலைக்கழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்கிடவும், 2012 ஆண்டு முதல் ஓய்வூதியர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள பணப்பயன்களை வழங்கிடவும், பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள ஆசிரியர், ஊழியர்களுக்கான பதவி உயர்வுகள் மற்றும் நிலுவையில் உள்ள 7 –வது ஊதியக்குழு நிலுவைத் தொகைகள் உள்ளிட்ட பணப்பயன்களை வழங்கிடவும்,



தொகுப்பூதியர், என்எம்ஆர் மற்றும் தினக்கூலி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தியும். சிறப்பு மற்றும் தொடர்பு அதிகாரிகளுக்கு வருடாந்திர ஊக்கத்தொகை மற்றும் 7 –வது ஊதியக்குழு ஊதியம் போன்றவற்றை வழங்கிட வேண்டும் உள்ளிட்ட 15 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி கடந்த ஆக.19 –ம் தேதி முதல் தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதுநாள் வரை கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், இன்று செப்.15–ம் தேதி செவ்வாய்க்கிழமை காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து துறைகளும் மூடப்பட்டது. வகுப்புகள் எதுவும் நடைபெறாததால் மாணவர்கள் அனைவரும் கலைந்து சென்றனர். பணிகள் எதுவும் நடைபெறவில்லை. பல்கலைக்கழக நிர்வாக அலுவலகம் மற்றும் தேர்வு துறை அலுவலகம் அனைத்தும் பூட்டப்பட்டு இருந்தது. பல்கலைக்கழக நிர்வாக அலுவலகம் முன்பு ஆசிரியர், ஊழியர் மற்றும் ஓய்வூதியர் சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சி. சுப்பிரமணியன் தலைமையில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒருங்கிணைப்பாளர் சி. சுப்பிரமணியம் பேசுகையில் ஆசிரியர், ஊழியர்களின் ஊதிய மறு நிர்ணய சதியை (Salary Re Fixation) முறியடிக்க வேண்டும். தணிக்கை தடை என்ற பெயரில் ஆசிரியர், ஊழியர்களுக்கு எதிரான பல்வேறு பழிவாங்கும் நடவடிக்கைகளை அரசு கைவிட வேண்டும். பணி இறுதி மாத ஊதிய அடிப்படையில் மாத ஓய்வூதியம் அளிக்க வேண்டும் என்றார். போராட்டத்தில் இணை ஒருங்கிணைப்பாளர் ஆ. ரவி, ஊழியர் சங்க முன்னாள் தலைவர்கள் மதியழகன், மனோகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தேர்தல் பறக்கும் படை சோதனை: மதுராந்தகத்தில் ரூ.1 லட்சம் பறிமுதல்!

மதுராந்தகம், செப். 15–

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னி ட்டு தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த தவமணி என்பவர், சென்னையில் உள்ள உறவினர் வீட்டு மஞ்சள் நீராட்டு விழாவுக்காக காரில் சென்று கொண்டிருந்தார்.



மதுராந்தகம் அடுத்த அரைப்பாக்கம் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி தலைமையிலான குழுவினர். வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தவமணியின் காரை சோதனையிட்டதில், அதில் கணக்கில் வராத ரூ.1 லட்சம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து உரிய ஆவணங்கள் இல்லாததால், பறக்கும் படையினர் அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பணம் மதுராந்தகம் ஆர்.டி.ஒ. அலுவல கத்தில் உள்ள கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. இடைத்தே ர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர் சோதனையைத் தீவிர படுத்தியு ள்ளனர். ரூ.50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணங்களின்றி கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படும் என தேர்தல் ஆணையம் தொடர்ந்து எச்சரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# முடியவே முடியாது.. பொது சிவில் சட்டம் அமலுக்கு பீகாரில் போர்க்கொடி!

புதுடெல்லி, செப். 15–

பாஜகவின் என்டிஏ கூட்டணி ஆட்சி செய்யும் 21 மாநிலங்களிலும் 2029ஆம் ஆண்டிற்குள் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசியிருந்த நிலையில் பீகார் அதற்கு போர்க்கொடி தூக்கியுள்ளது. வெவ்வேறு மதங்களுக்கு உள்ள விதிவிலக்குகளை ரத்து செய்து திருமணம், விவாகரத்து, வாரிசு உரிமை மற்றும் தத்தெடுப்பு தொடர்பான ஒரே மாதிரியான சட்டத்தை அமல்படுத்துவதே பொது சிவில் சட்டம் ஆகும்.



பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெறும் மாநிலமான உத்தரகாண்டில் ஏற்கனவே பொது சிவில் சட்டம் அமலில் உள்ளது. குஜராத் , மத்தியப் பிரதேசம், அசாம் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொது சிவில் சட்டம் அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெற்றுள்ளது

நேற்று முன் தினம் மும்பையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமித் ஷா, 2029ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பாக, என்டிஏ ஆட்சியிலுள்ள 21 மாநிலங்களிலும் பொதுசிவில்சட்டம்நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்திருந்தார்.

பீகாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் – பாஜகவின் என்டிஏ கூட்டணி ஆட்சியில் உள்ளது. கடந்த ஏப்ரலில் மாநிலங்கவளை எம்.பி சீட்டுக்காக மாநில முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். அங்கு தற்போது பாஜகவின் சாம்ராட் சவுத்ரி முதல்வராக உள்ளார். நிதிஷ் குமாரின் மகனுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பாஜகவை சேர்ந்தவர் முதல்வராக இருந்தாலும் மக்கள் செல்வாக்கு நிதிஷ் குமாருக்கே உள்ளது. பொது சிவில் சட்டம் விஷயத்தில் ஐக்கிய ஜனதா தளம் தொடக்கம் முதல் ஒரு விசித்திர நிலைப்பாட்டில் தான் உள்ளது.

அதாவது, நாடாளுமன்றத்தில் பொது சிவில் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஐக்கிய ஜனதா தளம், பீகாரில் அதை செயல்படுத்த எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. நிதிஷ் குமாரும் இதுகுறித்து தன் நிலைப்பாட்டை ஏற்கனவே அறிவித்திருந்தார். அமித் ஷாவின் கருத்துக்கு பின் பேசிய ஐக்கிய ஜனதா தள மூத்த தலைவர் ஷியாம் ரஜக், "இவ்விவகாரம் குறித்த எங்கள் கட்சியின் நிலைப்பாடு முன்பே எங்கள் தலைவரால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பொது சிவில் சட்ட மசோதாவை எங்கள் கட்சி ஆதரித்தாலும், பீகாரில் அதைச் செயல்படுத்துவதற்கு நாங்கள் ஆதரவாக இல்லை என்று அவர் கூறியிருந்தார்," என்று தெரிவித்தார்.

ஐக்கிய ஜனதா தள செயல் தலைவர் சஞ்சய் ஜா, "பொது சிவில் சட்டம் குறித்து விவாதிக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேரில் சந்தித்துப் பேசவுள்ளோம்." என தெரிவித்துள்ளார்.

பீகாரில் பாஜக கூட்டணியில் இடம்பெற்றுள்ள ராம் விலாஸ் எல்ஜேபி கட்சி தலைவரும் மத்திய அமைச்சருமான சிராக் பஸ்வான் பேசுகையில், "நாட்டின் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை இரண்டிற்கும் எங்கள் கட்சி கட்டுப்பட்டது. அரசியலமைப்பு சட்டமே பழங்குடியினருக்கு சிறப்பு விலக்குகளை வழங்கியுள்ளது. பொது சிவில் வரைவு வெளிப்படையாக வெளியிடப்பட்டு ஆலோசனைகள் நடந்த பிறகே முடிவை அறிவிப்போம்." என தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஆந்திராவில் என்டிஏ கூட்டணியில் இடம்பெற்று ஆட்சியில் உள்ள தெலுங்கு தேசம் கட்சியின் மூத்த தலைவர் லவு ஸ்ரீ கிருஷ்ண தேவராயலு கூறுகையில், "தற்போது இதுகுறித்து எந்த விவாதமும் இல்லை. தேவை ஏற்படும் போது, அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்த பிறகே முடிவெடுக்கப்படும்." என தெரிவித்தார்.

# மூன்றில் ஒரு வேலைவாய்ப்பு சுற்றுலாத் துறையில் உருவாகிறது! சுமன் பில்லா!

புதுடெல்லி, செப். 15–

புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகளில் மூன்றில் ஒன்று சுற்றுலாத் துறையில் உருவாவதாக மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் நிர்வாக இயக்குநர் சுமன் பில்லா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.



சென்னையில் உள்ள கிராண்ட் சோழா ஹோட்டலில் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் 'சுற்றுலா சிறப்பு கருத்தரங்கு 2026' இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்த கருத்தரங்கை மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் நிர்வாக இயக்குநர் சுமன் பில்லா குத்துவிளக்கு ஏற்றி தொடக்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். அவர் பேசியதாவது:

"உலகளாவிய சுற்றுலா துறையில் இந்தியாவின் அடுத்தகட்ட வளர்ச்சிப் பாதை கண்முன் தெரிகிறது. அதிக முதலீடுகளும் வேலை வாய்ப்புகளும் உருவாகின்றன. விடுதிகள், வீட்டில் தங்கும் வசதி (ஹோம் ஸ்டே) போன்ற தொழில்கள் மக்கள் வீட்டைவிட்டு வெளியே றாமலேயே அவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்றன. உலகளவில் சுற்றுலா துறை வருமானம் 11.6 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளன. இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.8% ஆகும். அதேபோல், 36.6 கோடி வேலைவாய்ப்புகள் சுற்றுலா துறை மூலம் கிடைக்கின்றன. கடந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும் புதிதாக உருவாகும் வேலை வாய்ப்புகளில் மூன்றில் ஒரு வேலைவாய்ப்பு சுற்றுலாத் துறையில் உருவா வதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டில் 132 கோடி பேர் உள்நாட்டு சுற்றுலா சென்றனர். இந்த எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டுல் 434 கோடியாக அதிகரித்துள்ளது. இதுபோன்ற வளர்ச்சியை எந்த நாடும் அடையவில்லை. வேகமாக வளரக் கூடிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் ஒரு கோடி வெளிநாட்டினர் சுற்றுலாப் பயணிகளாக இந்தியாவுக்கு வருகை தந்துள்ளனர். இந்த எண்ணிக்கை தற்போது 2.1 கோடியாக அதிகரித்துள்ளது. 8.9 கோடி வேலை வாய்ப்புகள் சுற்றுலாத் துறையில் உருவாகியுள்ளது. இதுவரை இல்லாத வகையில் இந்தியர்கள் வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொள்கின்றனர். 3.2 கோடி பேர் வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொண்டு ள்ளனர். மத்திய சுற்றுலாத் துறைக்கு பிரதமர் நரேந்திர மோடி இலக்கு நிர்ணயித்துள்ளார். 8.9 கோடியாக இருக்கும் வேலை வாய்ப்புகளை அடுத்த 2030–க்குள் கூடுதலாக 2.5 கோடி அதிகரிக்க வேண்டும் என்றார்.

2014–ல் 75 ஆக இருந்த விமான நிலையங்கள் எண்ணிக்கை தற்போது 150 ஆக அதிகரித்துள்ளது. 400 ஆக இருந்த விமானங்களின் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்துள்ளது. இன்னும் ஆயிரம் விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. இது உள்நாட்டு சுற்றுலாத் தலங்களை இணைத்து சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும்" எனத் தெரிவித்தார்.

# ஹார்முஸில் பரபரப்பு! அமெரிக்க MQ-1 ட்ரோனை சுட்டு வீழ்த்திய ஈரான்!

வாஷிங்டன், செப். 15–

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பறந்த MQ–1 ட்ரோனை தனது புதிய வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் இடைமறித்து அழித்ததாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC) தெரிவித்துள்ளது. ஆனால் இந்த சம்பவம் குறித்து அமெரிக்க தரப்பிலிருந்து உடனடி உறுதிப்படுத்தல் வெளியாகவில்லை; எனவே செய்தியில் "ஈரான் கூறுகிறது" என்ற அடிப்படையில் வெளியிடுவது துல்லியமாக இருக்கும்.



# தாராபுரம் இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்!



தாராபுரம், செப். 15–

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட எஸ்.சுகன்யா வேட்புமனு செய்தார். வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜாவிடம் வேட்புமனுவை அளித்தார் திமுக வேட்பாளர் சுகன்யா.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020